**தலைப்பு 105 – வெகுசன ஊடக அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வெகுசன ஊடக அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெகுசன ஊடக அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சில் தளபாடப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 809,421 மற்றும் இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 167,999 செலவிடப்பட்டிருந்த போதிலும், திறைசேரி குறிப்பில் SA 82 இல் அப்பெறுமதி ஆரம்ப மீதியில் சீராக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி குறிப்புக்களில் அவ்வாறு உள்ளடக்கப்பட்டமை தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய சரிசெய்தலை மேற்கொள்வற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியான பெறுமதி காண்பிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையை கைவிட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 269,096 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 22,588 கடன் மீதியும் காணப்பட்டது. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதியான ரூபா 22,588 ஐ பதிலழிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. சேவையை கைவிட்டுச் சென்ற ஏனைய இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 246,508 கடன் பணத்தை தீர்த்து வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 891 இன் பிரகாரம் பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 இன் பிரகாரம் பிணைப் பதிவேடு தற்போது தயாரிக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 447(5) இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு | பொறுப்புக்கள் பதிவேட்டை ஆரம்பித்து பேணிச் செல்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வணிக நிகழ்ச்சித் திட்டங்கள் வரிகள் மூலம் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 262,000,000 ஆக இருந்த போதும், அமைச்சினால் 2022 ஆம் ஆண்டிற்காக கிடைத்த தேறிய வருமானம் ரூபா 215,020,000 ஆனமையால் 18 சதவீதம் குறைவாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. | டொலரின் பெறுமதி அதிகரித்து சென்றமை மற்றும் நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார நிலைமையுடன் இறக்குமதி நிகழ்ச்சித் திட்டங்கள் வரையறுக்கப்பட்டதுடன், அநேகமாக தொலைக்காட்சி நாடகங்கள் இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்ட ஒளிபரப்புதல் வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வணிக நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து உழைக்கப்பட்ட வருமானம் வரையறுக்கப்பட்டிருந்தது. | வருமான மதிப்பீட்டை இயலுமான வரை சரியாக தயாரித்து எதிர்பார்த்த வருமானத்தை சேகரிப்பதற்கு முயற்சித்தல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 04 மீண்டெழும் செலவின விடயங்களில் 08 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட | அமைச்சினால் தயாரிக்கப்படுகின்ற வரைவு மதிப்பீடு திறைசேரியினால் அங்கீகரிக்கும் போது | மதிப்பீட்டை சரியாக தயாரிப்பதற்கு ஆகக் கூடிய முயற்சி எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 12,961,918 தொகை நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டமையால் நிதிப் பிரமாணத்தின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுத்து பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்படுகின்ற திருத்தங்களின் காரணமாக இந்த நிலைமை ஏற்படுவதுடன், அதற்கு மேலதிகமாக காணப்படுகின்ற நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (ஆ) | 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 525,000 ஆன தேறிய நிதி ஏற்பாடுகளில் 100 சதவீதம் மற்றும் மேலும் 21 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 181,525,000 ஆன தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 149,009,721 என்பன பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அது 33 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கான பாதீட்டு சுற்றறிக்கைகளுக்கு இணங்க புதிய கொள்வனவுகள் வரையறுக்கப்பட்டமை, JICA செயற்திட்டத்திற்காக நிதியீட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டமை என்பவற்றை காரணமாக கொண்டு DTTB செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு மட்டத்தை அடைந்து கொள்ள முடியாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் நிதி ஏற்பாட்டின் பயன்பாடு வரையறுக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டை சரியாக தயாரிப்பதற்கு ஆகக் கூடிய முயற்சி எடுத்தல் வேண்டும். |
| (இ) | 04 செலவின விடயங்களின் நிதிஏற்பாட்டில் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்க மாற்றப்பட்ட பின்னரும் 03 செலவின விடயங்களில் 21 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அமைச்சின் வளாகத்தில் சூரிய கலங்களை பொருத்தியதன் காரணமாக மின்சார செலவினம் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் வீழ்ச்சியடைந்தமை. செலவின கட்டுப்பாட்டிற்கான வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளுக்கு | மதிப்பீட்டை சரியாக தயாரிப்பதற்கு ஆகக் கூடிய முயற்சி எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இணங்க அரச ஊடக விருதுவிழா நடாத்தப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் உரிய செலவின விடயங்களின் நிதிஏற்பாடு ஏனைய செலவினங்களுக்கு மாற்றப்பட்ட பின்னரும் சேமிக்கப்பட்டிருந்தது. | |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பொறுப்புக்களில் காண்பிக்கப்பட்ட 105-1-3-1402 செலவின விடயத்தில் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகையை விஞ்சி ரூபா 252,582 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். அத்தியாவசிய மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டு எல்லையினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படுவதை தவிர்க்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியில் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்குரிய வழிகாட்டியின் 3.3 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களின் இலக்கம் III இன் கீழ் வருகின்ற | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை தயாரிக்கும் போது காணப்பட்ட நலிவுகளின் காரணமாக திறைசேரி அறிக்கைகளை இணக்கம் செய்யும் போது தாமதம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, திறைசேரி ஒவ்வொரு செலவின தலைப்புக்களுக்கும் உரியதாக விநியோகிக்கின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று (SA 92) உடன் ஒப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், அமைச்சின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 2,480,310 ஆக இருந்ததுடன், திறைசேரி அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,233,641 ஆனமையால் ரூபா 1,246,669 இனால் இணங்கியிருக்கவில்லை. | ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் திறைசேரி குறிப்புக்களை பரீட்சித்து இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயயரித்து பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | - | அமைச்சுக்குரிய 03 வாகனங்கள் 2022 ஆம் ஆண்டின் போது விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன், இந்த விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதி காலத்தில் ஏற்பட்ட விபத்துக்களில் நிதிப் பிரமாணம் 104 இன் இறுதி பரிசோதனை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. அந்த பரிசோதனை முடிவடைந்த உடன் உரிய தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 880 | - | அரசாங்க உத்தியோகத்தர்களின் | அமைச்சின் உத்தியோகத்தர்களின் | நிதிப் பிரமாணத்தி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க அமைச்சின் 15 உத்தியோகத்தர்கள் அளவில் பிணை வைத்திருக்கவில்லை. | பிணை வைத்தல் பதிவேடு தயாரிக்கப்படுகின்றது. | ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் II பகுதியில் 5.1 ஆம் பந்தி மற்றும் 2022 திசெம்பர் 20 ஆம் திகதிய இலக்கம் 01/2020(11) என்ற அரச நிதி சுற்றறிக்கை | - | சகல அரசாங்க நிறுவனங்களும் தமது நிறுவனத்தால் சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் மீளாய்வு செய்து மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை 15 சதவீத உச்ச அளவின் கீழ் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அமைச்சினால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2017.11.07 ஆம் திகதிய 2044/21 ஆம் இலக்க நிதி அமைச்சின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் | | | | |
| | 3.1 ஆம் பிரிவு | - | அமைச்சு சொந்தமான 32 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணப்படுகின்ற எரிபொருள் வரையரையின் காரணமாக எரிபொருள் பரிசோதனை செய்தல் வசதியீனமாக இருந்தது. 2022.10.12 ஆம் திகதிய தெரிவு செய்யப்பட்ட வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் | | | | |
| (i) I பகுதியின் 9 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) ஆம் பந்தி | 684,195 | செயல்நிதித்த உப கட்டுநிதி பெற்ற பதவி நிலை உத்தியோகத்தரால் அந்த பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 684,195 ஆன உப கட்டுநிதி 04 தினங்கள் முதல் 7.5 மாதங்கள் வரையிலான வீச்சுடனான தாமதத்தில் தீர்த்து வைக்க்பபட்டிருந்தது. | செயல்நிமித்த உப கட்டுநிதி பெறப்பட்டு உரிய பணிகளை நிறைவேற்றும் போது உரிய சேவை அல்லது பணிகளை பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் முற்பணங்களை தீாத்து வைக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) I பகுதியில் 11.1 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | - | மீளாய்வாண்டில் பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொண்டு உரிய அறிக்கை எதிர்வரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2023 ஏப்ரல் 12 ஆம் திகதி வரையிலும் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் தற்போது இறுதி கட்டத்தில் காணப்படுகின்றது. அது பூர்த்தி செய்யப்பட்டவுடன் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி PED/RED/01/01/2020/02 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களும் தமது நிறுவனத்திற்காக ஒவ்வொரு ஆண்டிற்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டை அமுல்படுத்துவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன், அடுத்து வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேசிய அபிவிருத்தி ஊடக நிலையம் மற்றும் இலங்கையின் பிராந்திய தொலைக்காட்சி ஒளிபரப்கை டிஜிடல் மயப்படுத்தும் செயற்திட்டத்தின் நிதிஏற்பாடு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக பிரச்சினைகள் காணப்பட்டதன் காரணமாக உரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தை அங்கீகரித்தல் தாமதமடைந்ததன் காரணமாக அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை உரிய கால எல்லையில் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி PED/RED/01/01/2020/02 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 12 இன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் | செயற்பாடுகளை அமுல்படுத்தும் கால அட்டவணை, எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம், பூர்த்திப் பெறுபேறுகள் காலாண்டு ரீதியாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய செயற்பாடுகளின் கால அட்டவணை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி/ விளைவுகள் (Output/ Outcome) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவை திட்டம், உள்ளக கணக்காய்வு திட்டம் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சற்கு கையளிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்களின் பிரகாரம் காலாண்டு ரீதியாக சமர்ப்பித்தல் இலகுவாகும். எதிர்காலத்தின் போது அரச நிதி சுற்றறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் மாதாந்த செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மற்றும் விளைவுகள் தயாரிக்கப்படும். | |

**3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 38 செயல்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சட்ட வழங்கல் செயற்பாடுகளின் போது சட்டமா அதிபர் மற்றும் சட்ட வளங்கள் திணைக்களத்தில் இருந்து அவதானிப்புக்கள் பெறுவதில் தாமதம் ஏற்பட்டமை, அமைச்சரவை உப குழுவிற்காக சட்ட வரைவு அனுப்பியதன் காரணமாக உப குழு அறிக்கை பெறப்படும் வரை மிகுதி செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஏற்பட்டமை. தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலைய நிதி ஏற்பாடு கிடைக்காமை மற்றும் நாட்டில் காணப்பட்ட அரசியல் நெருக்கடிகளின் இடையே அநேகமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உச்ச அளவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேசிய அபிவிருத்தி நிலையங்களை ஸ்தாபிக்கும் நோக்கம் அரச கொள்கை மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் சரியாக மக்களுக்கு சென்றடைவதாக இருந்த போதிலும், அவ்வாறான பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | நிலையங்களை ஸ்தாபிக்கும் நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு குறைவான வீதத்தில் காணப்பட்டது. | பல்வேறு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு உச்ச அளவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வணிக நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 1382 விடுவிப்பு சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 215,020,000 வரியாக அறவிடப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட வருமானம் ரூபா 438,470,000 ஆகும். அதன் பிரகாரம் 51 சதவீதத்தால் வருமானம் குறைவடைந்திருந்தது. | டொலரின் பெறுமதி உயர்வடைந்து சென்றமை மற்றும் நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார நிலைமைகளுடன் இறக்குமதி நிகழ்ச்சி திட்டங்களை வரையறுக்க வேண்டியிருந்ததுடன், அநேகமாக தொலைக்காட்சி நாடகங்கள் இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை ஒளிபரப்புதல் வரைவறுக்கப்பட்டதன் | வருமானத்தை அதிகரித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வணிக நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து உழைக்கப்பட்ட வருமானம் வரையறுக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | இலங்கையில் பிராந்திய தொலைக்காட்சி ஒளிபரப்பு டிஜிட்டல்மயப்படுத்தும் செயற்திட்டம் 2014 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அமுல்படுத்தாமையினால் மீண்டும் 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்தின் படி நாளது வரையாக்கப்பட்டிருந்ததுடன், தொழில்நுட்பத்துடன் அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் மூலம் நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்ற 16 ஒளிபரப்பு கூடங்களை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் 2023 யூன் 30 வரையிலும் ஒரு ஒளிபரப்பு கூடமேனும் ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 119.50 மில்லியன் கிடைத்திருந்த போதிலும், ரூபா 8.67 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 110.83 மில்லியன் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | பின்னர் பதிலளிக்கப்படும். | செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 இன் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை பட்டியலிட்டு பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன், அடுத்து வரும் ஆண்டிற்கான பெறுகை செயற்பாடுகள் விரிவாக தயாரிக்கப்படல் வேண்டும். எனினும், அமைச்சு தயாரித்த பெறுகைத் திட்டம் 2022 ஆம் ஆண்டிற்காக மாத்திரமாக இருந்ததுடன், பெறுகைத் திட்டம் 4.2.2(உ) இன் பிரகாரம் 06 மாதங்களுக்கு ஒரு தடவை நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அமைச்சினால் 2021, 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) தளபாடப் பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் உள்ளக அழகுபடுத்தல் ஒப்பந்த நடவடிக்கைகள் 2021 ஒக்டோபர் 28 ஆம் திகதி தனியார் கம்பனிக்கு ரூபா 39,262,200 தொகை மற்றும் | பின்னர் பதிலளிக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிச்சயமற்ற செலவினங்கள் 10 சதவீதத்தை உள்ளடக்கிய விலையில் (வரி இன்றி) கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரையில் ரூபா 40,475,229 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அத்திகதி வரையில் மதிப்பீட்டை விஞ்சி ரூபா 1,213,029 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | கேட்போர் கூடத்தை நவீன மயப்படுத்துவதற்காக ரூபா 5,923,727 ஆன மதிப்பீட்டை கவனத்தில் கொள்ளாமல் ரூபா 8,093,410 ஆன மதிப்பீடொன்று ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மூலம் அமைச்சுக்கு ரூபா 2,169,683 மேலதிக கிரயம் ஒன்றை செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. | பின்னர் பதிலளிக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவிற்காக அலுவலக இட வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு மேலதிக நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக நவீனமயப்படுத்தும் ஒப்பந்தங்களை மேற்கொள்கின்ற ஒப்பந்த நிறுவனத்தில் இருந்து கூறுவிலைகள் பெற்று ஆலோசனை நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு பரிந்துரை பெற்றுக் கொள்வதற்கு பெறுகைகள் குழு பரிந்துரை செய்திருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்த நிறுவனத்தால் வரி இன்றி ரூபா 6,745,492 மதிப்பீடொன்று | பின்னர் பதிலளிக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், ஆலோசனை நிறுவனத்தால் ரூபா 5,621,511 தொகை பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 5,621,511 பெறுமதியில் ஒப்பந்தம் கையளித்தல் கேள்வி கோரல் இன்றி பெறுகைக் குழு தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (iv) | a. | அமைச்சின் வளவில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் பெறுகைகளின் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழகாட்டிக் கோவையின் 7.8.4 இன் பிரகாரம் கேள்விக் காப்புறுதி/ கேள்விக் காப்பீட்டை அங்கீகரிக்கும் வகையில் சமர்ப்பிக்காமையினால் ஆகக் குறைந்த கேள்வி ஆலோசனை நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், இரண்டாவது கேள்வி ஆலோசனை நிறுவனத்தால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் ஆலோசனை நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர் பரிந்துரை செய்யப்பட்டு முறையற்ற தீர்மானத்திற்கு உடன்பட்டு பெறுகைகள் கையளிக்கப்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபா 5,492,939 | பின்னர் பதிலளிக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | | |
| b. | ஆரம்ப மதிப்பீட்டை தயாரிக்கும் போது சரியான பிரகாரம் தேவைகளை இனங்காணமையினால் உள்ளக வலையமைப்பு முறைமை மற்றும் தொலைபேசி இணைப்புக்களுக்காக ரூபா 4,489,873 மேலதிக செலவின பொறுப்பொன்றை செய்வதற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பின்னர் பதிலளிக்கப்படும். | மதிப்பீடு தயாரித்தல் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (v) | தளபாட பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் உள்ளக அழகுபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேவையான ஆலோசனை சேவையினை பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்த தொகையில் 08 சதவீத கட்டணத்தின் கீழ் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் நியமிக்கப்பட்டிருந்தது. எனினும், அவர்களின் மேற்பார்வை உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பின்னர் பதிலளிக்கப்படும். | ஆலோசனை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ''விசும்பாய'' கட்டிடத்தின் ஒரு பகுதி தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக அறைகளை பிரித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்காக 2021 திசெம்பர் மாதத்தின் போது அரசாங்க அச்சக திணைக்களத்தால் ரூபா 1,373,862 பெறப்பட்டிருந்த போதும், 2022 யூன் மாத்தின் போது அலுவலகம் அந்த இடத்தில் இருந்து அகற்றப்பட்டு அமைச்சின் வளவில் ஸ்தாபிக்கப்பட்டமையால் 06 மாதங்களான குறுகிய காலப் பகுதியில் செலவிடப்பட்ட மேற்கூறப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | இராணுவ தலைமையகத்தில் இருந்து செலுத்த வேண்டிய பணம் செலுத்தாமையின் காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் , மின்சார பட்டியலை செலுத்துவதற்காக நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் எதிர்காலத்தில் மின்சார பட்டியலை தீர்த்து வைப்பதாக இராணுவ தலைமையகம் அறிவித்திருந்தது. இவ்வாறு மின்சாரம் இன்றி அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு முடியாமையால் தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தின் உத்தியோகத்தர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். | கிரயத்திற்கான நலன்களை பெறும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மின்சக்தி அமைச்சுக்குரிய இலக்கம் CAR 1977 என்ற மோட்டார் வாகனம் வெகுசன ஊடக அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், 2022 மே 20 ஆம் திகதி ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறின் காரணமாக அத்தினம் உரிய முகவர் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | பழுதுபார்த்தல் நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் படி வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 427,500 ஆகும். வாகனத்தை பழுதுபார்த்தல் பூர்த்தி செய்து செலுத்துதல் | அமைச்சுக்கு இடையே சொத்துக்கள் தற்காலிகமாக பரிமாற்றிக் கொள்ளல், பழுதுபார்த்தல் செலவினங்களை செய்தல், சொத்துக்களை தீர்த்து வைத்தல் சரியான கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படல் |

| | | |
|---|---|---|
| ரூபா 111,290 பரிசோதனை மற்றும் ஏனைய செலவினங்கள் மற்றும் கட்டணமாக முகவர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்துதுடன், தொகையில் ரூபா 101,691 இற்கு வழங்கப்பட்ட மதிப்பீட்டின் பின்னர் ரூபா 1,232,362 ஆக திருத்தப்பட்டிருந்தது. பின்னர் இந்த வாகனத்தின் பழுதுபார்த்தல் ரூபா 427,500 இற்கு இணங்கிய தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரை அமைச்சுக்கு வாகனத்தை கையேற்பதற்கும் மற்றும் மின்சக்தி அமைச்சுக்கு பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமையினால் வாகனத்தின் இருப்பு ஆபத்துக்கு உட்பட்டிருந்தது. | பொறியியலாளரால் அவதானிக்கப்பட்டிருந்தது டன், வாகனத்தின் ஏனைய கோளாறுகளின் நிலைமை பரீட்சிக்கப்பட்டமையால் அதனை பரீட்சிக்கும் வரை கையளிப்பதற்காக தயாரிக்கப்பட்ட ரூபா 427,500 பெறுமதியான காசோலை அந்த நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை. | வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவைகளை சரியாக இனங்கண்டு அதற்கு போதியளவான நிதியை முற்பணமாக வழங்க வேண்டியிருந்த போதிலும், 05 உத்தியோகத்தர்களுக்கு 08 சந்தாப்பங்களின் போது வழங்கப்பட்ட முற்பணம் பயன்படுத்தப்படாமல் சில தினங்கள் கையில் வைத்திருந்து முழுமையாக தீர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | சந்தையில் பொருத்தமான பொருட்கள் காணப்படாமை, பிரயாணங்கள் இரத்துச் செய்யப்பட்டமை, கலந்துரையாடல் இரத்துச் செய்யப்பட்டமை போன்ற காரணங்களின் அடிப்படையில் முற்பணமாக வழங்கப்பட்ட பணம் பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் முழுமையாக தீர்க்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | தேவையின் பிரகாரம் முற்பணங்களை வழங்குவதற்கும், மாற்றமடைகின்ற நிலைமைகளின் பிரரகாரம் உடனடியாக தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒரு கட்டுநிதி வழங்கி அது தீர்த்து வைப்பதற்கு முன்னர் மீண்டும் கட்டுநிதி வழங்கப்பட்ட 09 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | அமைச்சில் வரையறுக்கப்பட்ட பதவியணி உத்தியோகத்தர்கள் இருந்தமையால் மீண்டும் உப கட்டுநிதி வழங்குவதற்கு ஏற்பட்டிருந்தது. எனினும், தற்போது அவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கட்டுநிதி வழங்குதல் உரிய கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை ஆகக் கூடிய வகையில் பாதுகாக்கும் சிறந்த ஊடக துறையினை உறுதிப்படுத்தும் நோக்குடன் இலத்திரனியல் ஊடகத்திற்கான ஒளிபரப்பு அதிகார சபை சட்டம் கணக்காய்வு திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தொலைக்காட்சி மற்றும் வானெலி ஒலிபரப்பு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் பொறிமுறையை ஒழுங்கமைக்கும் திட்ட முறைமையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை உப குழுவினால் ஒளிபரப்பு சட்டத்தின் வரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் பொறிமுறையை ஒழுங்குபடுத்தும் திட்ட முறைமை இந்த உத்தேச சட்டத்தில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்படுகின்றது. | சட்டத்தை தயாரிக்கும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 34 அனுமதிப் பத்திரங்களுக்காக அனுமதி பத்திர கட்டணத்தை அறவிடுவதற்கும், வருடாந்தம் அல்லது தற்காலிக அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்தல் முறையான திட்ட முறைமையொன்றை | வெகுசன ஊடக அமைச்சினால் கட்டணம் அறவிடுவதற்காக தற்போது அமைச்சரவை குறிப்பொன்றில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேலும் பொது மாதிரிப் படிவம் வரைவு செய்யப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதும் | அனுமதிப் பத்திர கட்டணம் மற்றும் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கும் கட்டணம் என்பவற்றை அறவிடும் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்காமையினால் அனுமதிப் பத்திர கட்டணமாக மற்றும் அனுமதிப் பத்திர புதுப்பித்தல் கட்டணமாக பெறக்கூடிய கணிசமான வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. மேலும், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு அனுமதிப் பத்திரங்களில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு பொது படிவம் ஒன்று கணக்காய்வு திகதி வரையிலும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதுவரை அதற்கான பதில் கிடைத்திருக்கவில்லை. | |
| (உ) | factchecker.lk டொமென் என்ற பெயரின் கீழ் பேணிச் செல்லப்படுகின்ற இணையதளம் சிங்கள மொழியில் 2022 சனவரி 19 ஆம் திகதியிலும், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் 2021 நவம்பர் 10 ஆம் திகதியின் பின்னரும் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் பதிலளிக்கப்படும். | இணையதளத்தை நாளது வரையாக்குதல் வேண்டும். |
| (ஊ) | தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்திற்காக 2021 பெப்ரவரி 02 ஆம் திகதி முதல் பதவியணியினர் அவ்வப் போது ஆட்சேர்த்தல் மற்றும் சேவையை நீடித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவ சேவை திணைக்களத்தில் இருந்து பதவியணியினருக்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தின் பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பதவியணியினரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் இருந்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு முடியாமை போன்ற அபாயங்களை இனங்கண்டு அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கு எடுக்க வேண்டிய படிமுறையாக உரிய திட்டங்களை தயாரித்தல், உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்துதல் மற்றும் தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு குழுவொன்று நியமித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 02 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அதில் முதலாவது இலக்கின் முதலாவது குறிகாட்டி 20 சதவீதமும், இரண்டாவது இலக்கின் முதலாவது குறிகாட்டி 30 சதவீதமும், இரண்டாவது குறிகாட்டி 06 சதவீதமும் ஆக குறைவான மட்டத்தில் செயல்முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருந்தது. | பட்டய ஊடக தொழில் முயற்சியாளர் நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு உரிய சட்டம் தற்போது வரைவு செய்யப்பட்டு சட்ட வரைவு திணைக்களத்திற்கு 2022.08.18 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்ததுடன், அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் அதன் செயல்முன்னேற்றம் 20 சதவீதம் ஆகும். அரசாங்கத்தின் நிதிஏற்பாடு இன்மை, நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமை மற்றும் செலவின வரையறை சுற்றறிக்கைகளுக்கு இணங்கியதன் காரணமாக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் எதிர்பார்த்த பெறுபேற்றை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | பல்வேறு இடையூறான நிலைமையின் கீழ் இருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு ஆகக் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்களத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சுக்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் 2023 மார்ச் 31 ஆம் திகதிய வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான உள்ள கணக்காய்வாளரின் வெற்றிடத்தை நிறப்புவதற்கு உரிய அறிவித்தல்களை பெற்றுக் கொள்வதற்காக அரச நிர்வாக அமைச்சின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட நிலையில் 08 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 04 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 07 வெற்றிடங்களும், ஆரம்ப நிலையில் 17 வெற்றிடங்களுமாக 36 வெற்றிடங்கள் காணப்பட்டமை ஆக்கபூர்வமான சேவை மட்டத்தை பேணிச் செல்வதில் நேரடியாக தாக்கமளித்திருந்தது. | காணப்படுகின்ற வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்படுகின்றது. | நிறுவனத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்கின்ற வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதற்கும், தேவை ஏற்படுமாயின் பதவியணியினரை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வெகுசன ஊடக அமைச்சில் சம்பளம் பெறுகின்ற 03 உத்தியோகத்தர்கள் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிற்கு (RTI), 04 உத்தியோகத்தர்கள் கட்டுப்பாட்டு சபைக்கும், 02 உத்தியோகத்தர்கள் அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். மேற்கூறப்பட்ட தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் மூன்று உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு சேவையினை வழங்காமல் ரூபா 1,559,255 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தகவல் அறியும் ஆணைக்குழுவின் வெற்றிட பதவிகளுக்காக 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பகிரங்க மேற்பார்வையாளர் சபைக்காக 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அந்த உத்தியோகத்தர்களில் 04 பேர் கலாசார அமைச்சில் இருந்து இந்த அமைச்சுக்கு இடமாற்றம் பெற்று தற்போது அந்த பிரிவில் நியமிக்கப்பட்டுள்ளனர். | அமைச்சின் பதவியணியினர் அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |